www.padippakam.com



# காக்கை வன்னியனான கதையும் நம்பிகள் நளவர்களான கதையும்


27

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

## வரலாற்றுத் தொடர்

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றில் சங்கிலி மன்னனது வரலாற்றைச் சொல்லும் போது தமிழ் வரலாற்று ஆசிரியர்களுக்கு இடையே முரண்பாடு உள்ளது. சங்கிலி செகராச . சேகரன் என்ற ஒருவனும் - சங்கிலிகுமாரன் என்ற ஒருவனுமாக இரண்டு சங்கிலி மன்னர்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்திருக்கிறார்கள். முதற் சங்கிலி கி.பி. 1519 தொடக்கம் 1565 வரை ஆண்டவன். இரண்டாவது சங்கிலி கி.பி 1615ல் இருந்து 1620 வரை ஆண்டவன்.



காக்கை வன்னியன் தன் உடையை மாற்றிச் சுய கோலத்துடன் அரசன் [சங்கிலி] முன் வெளிப்பட்டான். வன்னியனைக் கண்டவுடன் அரசன் எதிர் கொண்டோடி, இப்பொழுதுதான் உன் மனதில் என் மேற்றயவு பிறந்து எனக்கு உதவி செய்ய வந்தாயா? என்று சொல்லி அவனை கட்டி முத்தமிட்டான். வன்னியனும் அரசனைக் கட்டி முத்தமிடுப்வனைப்போலக் கட்டிப்பிடித்து பிடி விடாமல் நிற்க, பறங்கிய வீரர்கள் ஓடிவந்து அவனைக் கைது செய்தார்கள்

யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியுற்றபின் கி.பி 1736-ம் ஆண்டு ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கொழும்பு தேசாதிபதியாகவும் அதற்கு முன்பு யாழ்ப்பாண கொமாண்டராகவும் இருந்த ஜான் மக்காறா (JAN MAC CARA) வேண்டுகோளின்படி மாதகலைச் சேர்ந்த மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலையில் இந்த இரண்டு சங்கிலியும் ஒன்றென்றும் - காக்கை வன்னியனால் காட்டிக் கொடுக்கப்பட்ட சங்கிலி போத்துக்கேயரால் சிரச்சேதம் செய்து கொல்லப்பட்டு விட்டான் என்றும் எழுதப்பட்டு விட்டது.

ஆனால் உண்மையான வரலாற்றின்படி இரண்டு சங்கிலிகளும் போத்துக் கேயருடன் சண்டை செய்துள்ளனர். முதலாவது சங்கிலி அதாவது செகராச சேகரனுக்கும் போத்துக்கேயருக்கும் நல்லூரில் நடந்த யுத்தம் கி.பி 1560-ம் ஆண்டு நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றது சங்கிலியனே. இரண்டாவது சங்கிலிக்கும் அதாவது சங்கிலி குமாரனுக்கும் போத்துக்கேயருக்கும் நடந்த யுத்தம் கி.பி 1620-ம் ஆண்டு நடந்தது. இந்த யுத்தத்தில் தான் போத்துக்கேயர் வெற்றியடைந்து சங்கிலியை சிரச்சேதம் செய்து கொன்றார்கள்.

அதுபோல் காக்கை வன்னியன் சங்கிலியனைக் காட்டிக் கொடுத்தான் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றல்ல. என்றும், அப்படி ஒருவன் அக்காலத்தில் இருந்ததில்லை என்றும் அநேகமான தமிழ் வரலாற்றாசிரியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சங்கிலியனுக்கும் போத்துக்கேயருக்கும் நடந்த சண்டையில் காக்கைவன்னியன் சங்கிலியனைக் காட்டிக் கொடுக்கும் காட்சியில் மயில்வாகனப் புலவர் இவ்வாறு விபரிக்கிறார்...

(நல்லூர் யுத்தத்திலே சங்கிலி நின்றுகொண்டிருக்கிறான். போத்துக்கேயரின் படையும் சங்கிலியின் படையும் நேருக்கு நேர் மோதிக் கொள்கின்றன. சங்கிலியனின் எதிரியான பரநிருப சிங்கம் சங்கிலியனைப் பிடிப்பதற்கான சதித்திட்டத்தை காக்கை வன்னியனுக்கு வகுத்துக் கொடுத்திருக்கிறான்....)

அந்த வேளையில் காக்கை வன்னியனும் சேனைக்குள் நுழைந்து சமீபத்தில் நின்றான். பரநிருபசிங்கம்தான் காக்கை வன்னியனுடன் சொல்லியிருந்த படியே தூரத்தில் வாய்ச் சமர்த்துள்ள ஒருவனை நிற்க வைத்து, வேறொருவனை சேனாதிபதியிடத்தில் அனுப்பி இந்தப் போரைக்குறித்து உமக்கோர் அந்தரங்கம் சொல்லும்படி உம்மை ஒருவன் தேடிக் கொண்டு நிற்கிறான் என்றறிவித்தான். சேனாதிபதி அந்தச் செய்தி பற்றியறிய வெகு ஆவலுடன் விரைந்து போனான். அப்பொழுது அங்கே நின்றவன் சேனாதிபதியின் மனதைக் கவரத்தக்க பேச்சுக்களை வருவித்துப் பேசிச் சேனாதிபதியை தன் வாய்ச் சாமர்த்தியத்தினால் தடுத்து நிற்க, காக்கை வன்னியன் தன் உடையை மாற்றிச் சுய கோலத்துடன் அரசன் (சங்கிலி) முன் வெளிப்பட்டான். வன்னியனைக் கண்டவுடன் அரசன் எதிர் கொண்டோடி, இப்பொழுதுதான் உன் மனதில் என் மேற்றயவு பிறந்து எனக்கு உதவி செய்ய வந்தாயா? என்று சொல்லி அவனை கட்டி முத்தமிட்டான். வன்னியனும் அரசனைக் கட்டி முத்தமிடுபவனைப்போலக் கட்டிப்பிடித்து பிடி விடாமல் நிற்க, பறங்கிய வீரர்கள் ஓடிவருவதைக் கண்டு தமிழ் சேனை வீரர்கள் ஆயுதங்களை எடுத்து போராட முயன்றார்கள் அப்படி அவர்கள் முயல்வதைக்கண்டு "சேனாதிபதியின் உத்தரவின்றி ஒருவரும் ஆயுதம் தொடவெண்ணாது" என்று பருநிருபசிங்கன் தடை பண்ணினான். அப்பொழுது சேனா வீரர்கள் ஆயுத மெடுக்க உத்தரவில்லையே! உத்தரவில்லையே என்று சத்தமிட்டுக் கொண்டு அரசனையும் வன்னியனையும் அந்த நிலையில் விட்டு விட்டு ஓடிப்போனார்கள். பறங்கியர்கள் யாதொரு தடையுமின்றி , சங்கிலி அரசனைப் பிடித்து விலங்கிட்டுச் சேனாதிபதியையும் தொடர்ந்து பிடித்து வாளினாற் கொலை செய்து கோட்டை கோபுரங்களையெல்லாம் ஒப்புக்கொண்டார்கள்.

(யாழ்ப்பாண வைபவ மாலை பக். 75, 76)

உண்மையில் காகு அல்லது காக்கு என்ற தளபதியின் பெயரையே மயில்வாகனப் புலவர் காக்கைவன்னியன் என்று மாற்றிவிட்டார் என்பது முதலியார் இராசநாயகம், முதலியார் குல சபாநாதன், சுவாமி ஞானப்பிரகாசர் முதலான பல்வேறு தமிழ் வரலாற்று ஆசிரியர்கள் கருத்தாகும்.

போத்துக்கேயர்கள் தங்கள் காலத்திலிருந்த யாழ்ப்பாண அரசையும், அரசகுமாரர்களையும் காரணம் பற்றி சின்னப் பெயர்களால் அழைத்தார்கள். பரநிருபசிங்கனை அவனுக்கிருந்த மிதப்புப்பல் காரணமாக வக்கிரத்துக்குறி பண்டாரமென்றும், புவிராஜபண்டாரத்தை கூனன் என்றும் அவனது மருமகனை காகு என்றும் அழைத்தார்கள். காகு என்பதற்கு போத்துக்கேய மொழியில் கொன்னையன் என்று அர்த்தமாகும். புவிராஜ பண்டாரத்தின் மருமகன் கொன்னையனாக இருந்தபடியால் அவனை காகு என்று போத்துக்கேயர் அழைத்ததையே மயில்வாகனப் புலவர் காக்கை வன்னியன் என்று தவறாக அர்த்தம் கொண்டுவிட்டார். அத்தோடு போத்துக்கேயரால் கைது செய்யப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்ட சங்கிலிகுமாரனின் காலமும் காக்கை வன்னியனுடன் சேர்ந்து சதி செய்ததாக சொல்லும் பரநிருபசிங்கனின் காலமும் வேறாகும். பரநிருபசிங்கம் முதலாவது சங்கிலி செகராசசேகரனின் அண்ணனாகும்.

உண்மையில் மயில்வாகனப் புலவர் ஒரு சிறந்த புலவர் ஆனால் சரித்திர ஆராய்ச்சியாளர் கிடையாது. அவர் வாழ்ந்த 18-ம் நூற்றாண்டில் அதற்கான தேவையும் அவருக்கு இருக்கவில்லை. அவர் ஒல்லாந்து தேசாதிபதியின் கட்டளையின்படி தான் கர்ண பரம்பரையாக 'கேள்விப்பட்ட கதைகளைக் கொண்டும், அவருக்கு முன் யாழ்ப்பாண மன்னர்களின் காலத்தில் இயற்றப்பட்ட கைலாயமாலை, வையா பாடல், பரராச சேகரன் உலா, இராச முறை ஆகிய நூல்களை அடிப்படையாக வைத்துமே யாழ்ப்பாண வைபவமாலை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாண வைபவ மாலையின் ஆரம்பமே மகாவம்ச புனைகதையான விஜயன் கதையை அடியொற்றியதாக காணப்படுகிறது. மகாவம்சம் பரம்பரையினர் விஜயனை ஆரியனாகவும், பௌத்த சிங்களப் பாரம்பரியத்தின் முன்னோடியாக காட்ட முற்படுகின்ற மாதிரி மயில்வாகனப் புலவர் உயர்குல இந்துவாகவும் காசித் தொடர்புள்ளவராகவும் காட்ட முற்படுகின்றார். அவருக்குப் பின் அவரது வைபவமாலைக்கு விளக்கம் எழுதிய பலரும் தங்கள் தங்கள் குலப்பெருமைக்கு வலிமை சேர்க்கும் விதத்தில் மகாவம்சப் பொய்யுரைகளுக்கும் புனைகதைகளுக்கும் வலுச்சேர்க்கும் வகையில் பல இடைச் செருகலையும் சேர்த்துவிட்டனர்.

முதலாவது சங்கிலி செகராச சேகரனின் காலத்தில் ஒரு வன்னியக் குடியேற்றம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது. யாழ்ப்பாண வைபவமாலையில் உள்ள குறிப்பின்படி அந்தக்காலத்தில் நாற்பத்தொன்பது வன்னியர்கள் அவர்களது பரிவாரங்களுடன் தமிழ்நாட்டிலிருந்து வந்தபோது நெடுந்தீவுக் கடலில் அவர்கள் வந்த படகுகள் கவிழ்ந்து போய்விட்டது. அதில் பலர் இறந்து போக அவர்களின் தலைவனான கரைப்பிட்டி வன்னியன் என்பவனும் அவனது மனைவி அம்மைச்சி நாச்சியாரும் உயிர் தப்பிய மற்றய வன்னியர்களின் மனைவிமாரோடும் வந்து ஒட்டைகுறிச்சி என்றழைக்கப்படும் கந்தரோடையில் வீடுகட்டிக் கொண்டு இருந்துவிட்டார்கள்.

இந்தக் கரைப்பிட்டி வன்னியனின் கீழ் 60 கத்திக்கார நம்பிகள் சேவகர்களாக இருந்தார்கள். இந்த நம்பிகளின் தலைவனது நம்பியின் மகளை கரைப்பிட்டி வன்னியன் கெடுத்துவிட, அதையறிந்த நம்பித் தலைவன் கரைப்பிட்டி வன்னியனை வெட்டிக் கொன்றுவிட்டான். இந்த விடயத்தை அறிந்த சங்கிலி நம்பிகள் தலைவனைப் பிடித்து விசாரித்து அவனுக்கு மரணதண்டனை கொடுத்துவிட்டு மற்ற நம்பிகளை ஊரைவிட்டு ஒதுங்கியிருக்க வேண்டும் என்று கட்டளையிட்டுவிட்டான். இதனால் பிழைப்புக்கு வழியில்லாமல் போன நம்பிகள் ஊரின் ஒதுக்குப்புறத்திலிருந்த சாணாரணக் குப்பம் என்ற இடத்திற்குச் சென்று அங்கிருந்த சாணாருடன் சேர்ந்து தாங்கள் செய்துவந்த தொழிலை விட்டு நழுவி சாணார் செய்த மரமேறும் தொழிலை செய்ய தலைப்பட்டதால் நளுவிகள் என்று அழைக்கப்பட்டு பின்னர் நளவர்கள் ஆனார்கள். இந்த நளவர்கள் என்ற சாதி அமைப்பு இந்தியாவில் இல்லை என்பதும் குடாநாட்டில் மட்டுமே இருக்கின்ற ஒன்றென்பதும் வைபவமாலையில் சொல்லப்படுகின்ற மேற்சொன்ன கதையை நியாயப்படுத்தும் சான்றுகளாகும்.

- நக்கீரன்

படிப்பகம்